# வெற்றிடங்கள்

## தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு

## (2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டது)

இந்த நிறுவனத்தில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிக்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**மொழி பெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) - 02 பதவிகள்**
**தகைமைகள் : வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் பல்கலைக்கழகமொன்றில் தமிழ் மொழியை அல்லது ஆங்கில மொழியை பாடமொன்றாகக் கற்று சித்தியடைந்து பெற்றுக்கொண்ட பட்டமொன்று.

**மற்றும்**

பட்டத்திற்காக தமிழ் மொழியை பாடமொன்றாகக் கற்று சித்தியடைந்த விண்ணப்பதாரர்கள், க.பொ.த (சா.தரப்) பரீட்சையில் ஆங்கில மொழி/ஆங்கில இலக்கியத்திற்கு திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல் அல்லது பட்டத்திற்காக ஆங்கில மொழியை பாடமொன்றாகக் கற்று சித்தியடைந்த விண்ணப்பதாரர்கள் க.பொ.த (சா.தரப்) பரீட்சையில் தமிழ் மொழி /இலக்கியத்திற்கு திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல்

**வயது:** 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

**சம்பள அளவு:** MA 3 - ரூபா 32,200 - 10x445 - 11x660 - 10x730 - 5x750 - 54,960

**ஆட்சேர்க்கும் முறை:**

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை

| | | |
|---|---|---|
| 01. | இயைபுடைய மேலதிக அனுபவம் | 30 புள்ளிகள் |
| 02. | இயைபுடைய மேலதிக கல்வி / தொழில்சார் தகைமைகள் | 30 புள்ளிகள் |
| 03. | ஏனைய திறன்கள் மற்றும் வினைத் திறன் | 15 புள்ளிகள் |
| 04. | நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமை | 25 புள்ளிகள் |
| | **மொத்தம்** | **100** |

**பொது நிபந்தனைகள்:**

1. அரசாங்கம் அல்லது கூட்டுத்தாபனம்/ நியதிகள் சபை/ ஆணைக்குழுவில் பணியாற்றுபவர்கள் தமது விண்ணப்பப் படிவத்தை நிறுவனத்தின் தலைவரின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.
2. தெரிவு செய்யப்படுபவர்கள் 1956ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க அரச மொழிக் கொள்கையின் கீழ் விதிக்கப்பட்டுள்ள சட்ட திட்டங்களுக்கு கட்டுப்படல் வேண்டும்.
3. நியமனம் பெறும் நாள் முதல் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ஆணைக்குழுவினால் 12% மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு 3% பங்களிப்புத் தொகை செலுத்தப்படும்.
4. நியமனம் பெறுபவர்களுக்கு அக்ரஹார காப்புறுதித் திட்டத்தின் கீழ் மருத்துவக் காப்புறுதி காப்பீடு கிடைக்கும்.
5. அனைத்து பதவிகளுக்கும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் உரித்தாகும்.

விண்ணப்பதாரிகள் சான்றிதழ்களின் புகைப்படப் பிரதிகளுடன் சுயமாகத் தயாரித்துக் கொண்ட சுய தரவுகளை உள்ளடக்கிய விண்ணப்பப் படிவங்களை பதிவுத் தபாலில் 2025-03-10ஆம் திகதிக்கு முன் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு அனுப்ப வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு,**
**அறை இல. 203-204,**
**கட்டிட இலக்கம் 02,**
**பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம்,**
**கொழும்பு 07.**